Copy of Deposition

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of criminal procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

CC.No. 108/2024

Deposition of Witness of PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெகதீஷ் | Caste | : |
| Father/Husband's Name | : நாட்ராயன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 01st April 2025.

எதிரி ஆஜரில் உள்ளார் .

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது ராமநாதபுரத்தில் வசித்துகொண்டு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். நான் 24.01.2022ம் தேதி ஈரோடு தனியார் கட்டுமான நிறுவனத்தில் பணிபுரிந்துவிட்டு எனது வீட்டிற்கு ஈரோட்டில் இருந்து ராமநாதபுரத்திற்கு செல்வதற்காக Unicorn என்ற இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது இரவு சுமார் 07.30 மணிக்கு எழுமாத்தூரில் இருந்து மொடக்குறிச்சி நோக்கி வந்த ஒரு Appachi இருசக்கர வாகனம் ஒரு லாரியை முந்தி செல்வதற்காக வலதுபுறமாக ஏறி வந்து எனக்கு முன்னால் சென்ற ஒரு வண்டியின் மீதும், எனது வாகனத்தின் மீதும் மோதிவிட்டார்கள். எனக்கு முன்னால் சென்ற வாகனம் Scooty ஆகும். நாவிதன்காட்டில் உள்ள ஒரு வீட்டின் முன்பு மேற்படி விபத்து நடந்தது.

2. இந்த விபத்தில் இரண்டு இருசக்கர வாகனங்களும் தூக்கி எறியப்பட்டு கீழே விழுந்ததில் எனக்கு இடது காலில் எலும்பு முறிவும், இடது புற கையிலும், முதுகிலும் காயம் ஏற்பட்டது. எனக்கு முன்னால் இருசக்கர வாகனத்தில் சென்ற நபருக்கும் எலும்பு முறிவு ஏற்பட்டதாக கூறினார்கள். வண்டியை ஓட்டி வந்த நபர் பெயர் வெள்ளைசாமி என தெரிந்துகொண்டேன். அந்த வாகனத்தில் மூன்று நபர்கள் வந்தார்கள். ஆஜரில் உள்ள எதிரி தான் அன்றைய தினம் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிவந்தார். அங்கிருந்தவர்கள் எங்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பின்னர் என்னை ஈரோடு SK மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார்கள். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தில் பின்னால் அமர்ந்து இருந்த இரண்டு நபர்கள் இறந்துவிட்டதாக பின்னிட்டு தெரிந்துகொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுபோல் தான் உள்ளது கையில் அடிபட்டு இருக்கும் போது நான் கையொப்பம் செய்தேன். புகார் வாக்குமூலத்தை நான்

தான் கொடுத்தேன். புகார் வாக்குமூலம் அ.தா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

நான் வேலை செய்யும் ஈரோடு தனியார் கட்டுமான நிறுவனத்தின் பெயர் M P Selli Constructions ஆகும். நாவிதன் காடு அருகே விபத்து நடந்த போது எந்த விளக்குகளும் அங்கு இல்லை என்றால் சரிதான். வாகனத்தை ஓட்டி வந்தவர் வெள்ளைசாமி என்பது விபத்து நடந்த போது தெரியுமா என்றால் தெரியும். நான் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வாகனத்தை ஓட்டி சென்றபோது எனக்கு முன்னால் வாகனத்தை ஓட்டி சென்ற நபரின் பெயர் என்ன என்றால் சந்திரசேகர் ஆகும். எனக்கு முன்னால் சந்திரசேகர் வாகனத்தை ஓட்டி சென்றது எனக்கு தெரிந்தது என்றால் சரிதான். எனக்கு வலது கணுகாலிலும், வலது முட்டியிலும், இடது காலில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டதாக போலீசார் விசாரணையின் போது கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு முன்னால் சென்ற வாகனத்திற்கும் எனக்கும் எவ்வளவு தூரம் இருந்தது என்றால் சரியாக தெரியவில்லை சுமார் 10 அடி இருக்கும்.

2. முன்னால் சென்ற சந்திரசேகரின் வாகனத்தில் எதிரியின் வாகனம் மோதியதை நான் நேரில் பார்த்தேனா என்றால் பார்த்தேன். சந்திரசேகரின் வாகனத்தை எதிரியின் வாகனம் உரசியபோது அவர் கீழே விழவில்லை என்றால் சரியல்ல. புகாரில் நான் மேற்படி சந்திரசேகர் விபத்தின்போது கீழே விழுந்தார் என கூறவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் இருட்டாக இருந்ததால் லாரி வந்தது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல எனக்கு தெரியும். 24.01.2021ம் தேதி விபத்து நடந்தது குறித்து காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான், சாட்சி தற்போது மருத்துவமனைக்கு வந்து போலீசார் புகார் பெற்று சென்றதாக கூறுகிறார். நான் கொடுத்த புகார் நானே எழுதினேனா என்றால் நான் சொல்ல சொல்ல எழுதப்பட்டது.

3. லாரியை முந்தி வந்து எனது வாகனத்தின் மீது மோதியதாக பதற்றத்தில் கூறினேன் என போலீசாரிடம் கூறினேனா என்றால் இல்லை. விபத்து நடந்த போது நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், வெள்ளைச்சாமியை பார்க்கவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் ஓட்டிவந்த வாகனம் Honda Unicorn இல்லை என்றாலும், CB Twister என்றாலும் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me/before me in the presence of the accused in open court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

sd/xxx(M.Mullai)
District Munsif cum Judicial Magistrate,
Elumathur Village in Modakurichi Taluk.

Copy of Deposition

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of criminal procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

CC.No. 108/2024

Deposition of Witness of PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : சந்திரசேகர் | Caste | : |
| Father/Husband's Name | : பழனிசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 01st April 2025.

எதிரி ஆஜரில் உள்ளார் .

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கோட்டைப்புதூரில் வசித்துகொண்டு வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.01.2022ம் தேதி இரவு சுமார் 07.30 மணிக்கு நான் ஈரோட்டில் இருந்து வீட்டிற்கு திரும்ப வந்து கொண்டிருந்தபோது நாவிதன்காடு அருகே எதிரே ஒரு லாரி வரும்போது அதை ஓவர்டேக் செய்து ஒரு இருசக்கர வானத்தில் மூன்று நபர்கள் வந்து எனது Jupitter Scooty வாகனத்தின்மீது மோதினார்கள். அதில் நான் கீழே விழுந்துவிட்டேன். எனது இடது கையில் மொக்கை காயம் ஏற்பட்டு வலி இருந்தது. நான் கீழே விழுந்திருந்தபோது எனக்கு பின்னால் வண்டிகள் விழுவதுபோல் சத்தம் கேட்டது. அங்கிருந்தவர்கள் என்னை தூக்கிவிட்டார்கள். அப்போது எனக்கு கைகளில் வலி இருந்தது. நான் அப்போது அங்கு நடந்ததை பார்த்துகொண்டிருந்தேன். ஆஜர் எதிரி அங்கு அமர்ந்திருந்தார். கீழே இரண்டு நபர்கள் படுத்திருந்தார்கள்.

2. எனக்கு கைகளில் வீக்கம் ஏற்பட ஆரம்பித்ததால் எனது மகனுக்கு போன் செய்து காரை வரவழைத்து முதலுதவிக்காக ஈரோடு சக்தி நர்சிங்ஹோமிற்கு சென்றேன். எதிரே வந்து மோதிய வண்டியை யார் ஓட்டி வந்தார்கள் என விபத்தின்போது எனக்கு தெரியவில்லை, கீழே விழுந்து எழுந்துவிசாரித்ததில் ஆஜர் எதிரி தான் வண்டியை ஓட்டிவந்தார் என்று தெரிந்துகொண்டேன். என் வாகனத்திற்கு பின்னால் வந்த இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த ஜெகதீஷ் என்பவருக்கு அடிபட்டதை நேரில் பார்த்து தெரிந்துகொண்டேன். அவரையும் அங்கிருந்தவர்கள் உட்கார வைத்திருந்தார்கள். 108 ஆம்புலன்ஸ் வந்தது எந்த மருத்துவமனைக்கு சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. பேச்சு மூச்சு இல்லாமல் படுத்திருந்த இரண்டு நபர்களும் இறந்துவிட்டதாக பின்னர் தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

24.01.2022ம் தேதி ஈரோடு மாவட்ட நீதிமன்றத்திற்கு சென்றுவிட்டு 07.00 மணிக்கு அங்கிருந்து கிளம்பினேன் என்றால் ஈரோட்டிற்கு சென்றிருந்தேன், நீதிமன்ற வேலை, வெளிவேலை முடித்துவிட்டு சம்பவ இடத்திற்கு வரும்போது சுமார் 07.30 மணி இருக்கும். ஈரோட்டில் இருந்து மொடக்குறிச்சி சாலை Single Road என்றால் Single Road இல்லை ஒரே ரோடுதான் பெரிய ரோடாகும். ரோட்டில் இருக்கும் கோடுகள் 4 அடி நீளமுள்ள விடுபட்ட கோடுகள் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. ஈரோட்டில் இருந்து நான் எனது வீட்டிற்கு இருசக்கர வானத்தில் வரவில்லை என்றாலும், எனது சொந்த காரில் வந்தேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் சொந்தமாக கார் உள்ளது என்றால் சரிதான். காரின் எண்.1771 Maruthi Zen ஆகும். விபத்து ஏற்பட்ட உடன் காவல்நிலையம் சென்று நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

2. சக்தி நர்சிங் ஹோமில் இருந்து கிடைத்த இண்டிமேசனின் பேரில் தான் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். எனக்கு இடது கை முட்டியிலும், வலது வயிற்று பகுதியிலும் அடிபட்டது என்றால் சரிதான். விபத்து நடந்த அடுத்தநாள் விபத்தில் அடிபட்ட கார்த்திக்பிரபு மற்றும் நவீன்குமார் ஆகியோர் பெற்றோர் எனது வீட்டிற்கு வந்தார்கள் என்றால் சரியல்ல, இரண்டு நபர்கள் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களுக்கு நிலம் சம்பந்தமாக பிரச்சனை இருப்பதாக கூறினார்கள். அதற்கு நான் ஆவணங்களை கொண்டு வரும்படியும், ஊர் பெரியவர்களிடம்பேசி பிரச்சனையை தீர்த்து வைப்பதாகவும் கூறினேன். 25.01.2022ம் தேதி என்னை அவர்கள் சந்தித்தார்கள் என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை.

3. எனக்கு பின்னால் வந்த வாகனத்தை ஓட்டி வந்த ஜெகதீஷ் எவ்வளவு தூரத்தில் வந்தார் என்றால் அவர் பின்னால் வந்ததால் எனக்கு தெரியவில்லை அவருடைய வாகனம் என்னுடைய வாகனத்தின் கண்ணாடியில் தெரிந்தது. போலீசார் வந்த பிறகு 108 ஆம்புலன்ஸ் வந்தது என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை போலீசாரும், ஆம்புலன்ஸ்ம் இருந்தது. எத்தனை நாட்கள் சக்தி நர்சிங்ஹோமில் சிகிச்சையில் இருந்தேன் என்றால் நான் அங்கு சென்ற போது மருத்துவர் இல்லை நர்ஸ் இருந்தார், முதலுதவி பெற்றுவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். அடுத்தநாள் காலை மீண்டும் மருத்துவமனைக்கு சென்றேன். நான் அன்றைய தினம்காரில் தான் வந்தேன் என்றாலும், இருசக்கர வாகனத்தில் நான் செல்லவில்லை என்றாலும் சரியல்ல. என்னுடைய காருக்கு விபத்து நடந்த தேதியில் காப்பீடு இல்லாததால் இருசக்கர வாகனத்தில் சென்றதாக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. காவல் துறையினர் கேட்டுக்கொண்டற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me/before me in the presence of the accused in open court interpreted / read over to the witness and admitted by the dependent to be correct.

sd/xxx(M.Mullai)
District Munsif cum Judicial Magistrate,
Elumathur Village in Modakurichi Taluk.